# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் (கூட்டிணைத்தல்)

**ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அப்துல்லா மஹரூப் அவர்களால் 2015, ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **13 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 10.00**

## ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமாகும். இது ஒரு அரசியல் சார்பற்றதாகும். மேலும் இது ஒரு சகல முஸ்லிம் சங்கங்களையும் ஒன்றிணைக்கும் சங்கமாகும். இச்சங்கம் 1983 ஆம் ஆண்டு மிகவும் மதிக்கத்தக்க தலைவர்களான சேர். ராஸீக் பரீத். கலாநிதி பதியூதீன் மஹ்முத், டாக்டர் எம். சீ. எம். கலீல், ஏ. அஸீஸ், ஏ. டபிள்யு. எம். அமீர், சட்டத்தரணி எம். எச். எம். அஷ்ரப் மற்றும் தற்போதைய மதிக்கத்தக்க தலைவர்களினால் ஸ்ரீலங்காவில் உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் சமூக பொருளாதார, கலாசார, கல்வி மற்றும் அரசியல் மேம்பாட்டுக்காகவும் அத்துடன் ஸ்ரீலங்காவிலுள்ள எல்லா முஸ்லிம் அமைப்புகளின் பாடுகலை ஒருமைப்படுத்தி தேசிய ஒருமைப்பாட்டை அத்துடன் மக்களிடையே நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் ஏற்படுத்தி அதன் வளங்களை தெளிவுபடுத்த முயல்வதாகும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாலும் அவ் விண்ணபத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டமானது, 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, "ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில் (கூட்டிணைத்தல்) சட்டம்" என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதற்குப்பின்னர் "கவுன்சில்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாப கவுன்சிலை கூட்டிணைத்தல்.

2-PL 009320 - 300 (2015/09)

னத்தில் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதற்குப் பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில்'' என்ற பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருத்தல் வேண்டும் ; அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றினை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) எமது நாட்டிலுள்ள பலவகையான முஸ்லிம் இயக்கங்களின் செயற்பாடுகளின் இணைப்புப் பாலமாக இருப்பது ;

(ஆ) முஸ்லிம் சமூகத்தின் திறமைகளையும், வளங்களையும் பயன்படுத்தி அதன்மூலம் சகல மக்களிடையே சமாதானத்துடனும், நட்புறவோடும் வாழ வழிவகுத்தல் ;

(இ) தேசிய ஒருமைப்பாட்டை பலப்படுத்துவதும், சகல சமூகங்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதும் ;

(ஈ) குறிப்பாக எமது சமூகத்திற்கும் பொதுவாக ஏனைய சமூகத்திற்கும் அதிகபட்ச நன்மைகளை ஏற்படுத்திக் கொடுப்பது ;

(உ) எமது சமூகத்தில் சகல துறைகளிலுமுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து மதிப்பீடுசெய்து அதன்மூலம் அப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது ;

(ஊ) முஸ்லிம்களின் குரலை எழுப்புவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி தேசிய ரீதியிலான சரியான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல் ;

(ஏ) முஸ்லிம் இயக்கங்களை ஒன்றிணைக்கும் மத்திய நிலையமாக செயல்படுதல் மேலும் முஸ்லிம் சமூகத்திற்கு அவசியமான திட்டங்களை வகுப்பதோடு பிரச்சினைகளை தீர்த்துவைக்க ஏற்பாடுசெய்வதும்.

*கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள்.*

**4.** இச்சட்டத்தின் வேறு எழுத்திலான சட்டத்தின் விதிகளுக்கு அமைய கூட்டுத்தாபனம் பின்வரும் அதிகாரங்களை கொண்டிருக்கும் :-

(அ) இச் சகல சட்டங்களை அமுல்படுத்தவும் நிறைவேற்றவும் ஆதரவு கொடுக்கவும் மேலும் ஏனைய ஏதாவது முக்கிய குறிக்கோள்களை அடையவும் இக்கூட்டுத்தாபனத்தின் நோக்கமாகும் ;

(ஆ) வங்கி வைப்புக்கணக்குகள் ஆரம்பிக்கவும், இயக்கவும் முடிவுக்குக் கொண்டுவரவும் பணம் திரட்டவும் உறுதிப் படுத்தல் இன்றியும் அல்லது உறுதிப்பத்திரத்தை சமர்ப்பித்து கடன் பெறவும் இக்கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரமுண்டு ;

(இ) உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடைகளை சேகரிக்கவும் பெறவும் ;

(ஈ) இக்கூட்டுத்தாபனத்திற்கு பணங்கள் மூலதனம் செய்யவும், எந்தவொரு காணி சுவீகரிப்பின்மூலமோ அல்லது பெற்றுக்கொண்டதன்மூலமோ கிடைத்த காணிகளில் கட்டிடங்கள் கட்டுவதற்கும் ;

(உ) இக்கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான உத்தியோகத்தர்களை சாதாரண தொழிலாளர்களை சேர்த்துக்கொள்ளவும், நீக்கவும், முடிவுக்கு கொண்டுவரவும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன், ஏதேனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் செய்தல் ;

(எ) இக்கூட்டுத்தாபனத்தின் முக்கியக் குறிக்கோள்களையும் விடயங்களாக அதிகமாக செயல்படுத்தலும் அமுல் படுத்தலும்.

*கூட்டுத்தாபனத்தின் செயல்பாடுகளை முகாமைப் படுத்தல்.*

**5**. (1) இக்கூட்டுத்தாபனத்தின், நிர்வாகம், அதிகாரம், நிர்வாகப் பொறுப்புகள் அத்தனையும் இக்கூட்டுத்தாபனத்தின் சட்டத்திற்கமைய தெரிவுசெய்யப்பட்டவர்களினால் அமுல்நடத்தப் படும் (இனிமேல் இதனை "ஆளுநர் சபை" என்று குறிப்பிடப்படும்) இச்சபை இக்கூட்டுத்தாபனத்தின் சட்டத்திற்கமைய தெரிவு செய்யப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டதாக இருத்தல்.

(2) இதன் முதலாவது ஆளுநர் சபை இச்சட்டத்தின் துணை ஆவணத்தில் பின்குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்ட தாகும்.

(3) இக்கூட்டுத்தாபனத்திற்கு எந்தவொரு பிரசித்திபெற்ற அங்கத்தினரை இணைத்துக்கொள்வதற்கு மூன்றில் இரண்டு வாக்குகளால் அதிகாரம் பெற்றவரை சட்டபூர்வமான இணைத் துக்கொள்ளும் அதிகாரம் இந்த ஆளுநர் சபைக்குண்டு. மேலும் ஏதாவது ஒரு அங்கத்தினர் மரணித்தால் ராஜினாமா செய்தால் அல்லது பதவி நீக்கப்பட்டால் அவ்விடத்தை இக்கூட்டுத்தாப னத்தின் சட்டதிட்டத்திற்கமைய தெரிவுசெய்யப்படுவார்.

(4) நிர்வாக சபைக்கு தலைவர், உபதலைவர், பொதுச் செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், உபபொருளாளர் ஆகியோரைக ஆளுநர் சபையினால் தெரிவுசெய்யப்படுதல்.

*அங்கத்தினர்களை பதிவு செய்தல்.*

**6**. (அ) அங்கத்தினர்களை அழைப்புவிடுத்து பின் அவரை அங்கத்தினராகத் தெரிவுசெய்யும் அதிகாரம் ஆளுநர் சபைக்குண்டு ;

(ஆ) ஒரு அங்கத்தினர் அங்கத்துவத்தை மரணம், பணிவிலகல் என்பவற்றைக் கொண்டு ஆளுநர் சபை தீர்மானிக்கும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7**. (1) ஆளுநர் சபையின் சிபார்சின்பேரில் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாக வேண்டும். கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபை விவகாரம் சம்பந்தமான தமது குறிக்கோள்களை இச்சட்டத்தின்படி ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதுபோல் நடத்தி அதன்மூலம் சில விதிகளை மாற்றவும் உள்ளடக்கவும், நீக்கவும், திருத்தவும் இக்கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரமுண்டு.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள சங்கத்தின் விதிகள் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் ;

(3) இச்சபையின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராக இருத்தல் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்படவுள்ளனவும் சங்கத்துக்குச் செலுத்தப்படவுமான கடன்கள்.*

**8**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இச்சபைக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று சபைக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய கொடுப்பனவுகள் உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் ஆதனம்.*

**9**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெற்றுக்கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனம் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பாக்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதிகள்.*

**10**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனம் தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கியில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும், கணக்காய்வும்.*

**11.** (1) கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றியும் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் ஆகக்குறைந்தது ஒருதடவை பரிசீலனை செய்யப்படுதலும் கணக்காய்வு செய்யப்படுதலும் வேண்டுமென்பதுடன் வருமான செலவினக் கணக்கிலும் ஐந்தொகையினாலும் செம்மை கூட்டுத் தாபனத்தால் நியமிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

*குழு நியமனம்.*

**12.** அங்கத்தினர்களிடையே ஒழுங்கையும் செயற்றிறனையும் ஏற்படுத்த முக்கியமாக தீர்மானமெடுக்கவேண்டிய அவசிய மேற்படின் காலத்திற்குக்காலம் தெரிவுக்குழு நியமிக்கும் அதிகாரம் ஆளுநர் சபைக்குண்டு.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் முத்திரையானது தெரிவுசெய்யப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தினால் முறையாக அதிகாரமளிக்கப் பட்ட வேறு ஆளினது முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுவதாயின் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களின் பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்ப மிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தின் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் இச்சட்டத்திலே குறிப்பிடப்பட்ட வர்களும் அவர்கள்மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர் களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தவோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் ஆங்கில, சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

துணை ஆவணம்

## ஆளுநர் சபை

அல்ஹாஜ். ஏ.எச்.ஜீ. அமீன் (L.L.B., L.L.M., J.P., U.M.)

அல்ஹாஜ். ஏ.சீ.எம்.ஸபீக். J.P., Bsc. F.I.M.I., M.I.R.T.E.(U.K) C.A.E., F.I.A.E.(SL)

அல்ஹாஜ். ஹபீபுள்ளாஹ் பா பலூல்

டாக்டர் ஹமீத் மொஹமட் மஹ்ரூப், எம்.பீ.பீ.எஸ்.

கலாநிதி மொஹமட் அனீஸ்

அல்ஹாஜ். எம்.டீ.எம். வசீர், ஜே.பி.

எம்.எச்.எம். நியாஸ்

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*